# ஐ. நா. வர்த்தக முன்னேற்ற மகாநாட்டுக்கு பாப்பரசரின் செய்தி


"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஆடு மாசி மீ 17-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 7-ம் இல.


சென்றவாரம் இந்தியாவின் தலைநகரமாகிய புதுதெல்லியில் ஐ. நா. வர்த்தக முன்னேற்ற மகாநாடு ஆரம்பித்து வைக்கப்பட்டபோது பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் தமது ஆசீர்வாதத்தை அம்மகாநாட்டுக்கு ஈந்தருளி ஒருசெய்தியும் அனுப்பியிருக்கின்றார். அச்செய்தியில் வளர்ச்சியுற்ற நாடுகள் வளர்ச்சி பெறாத நாடுகளுக்கு தம்மாலியன்ற உதவிகள் புரிந்து அவைகளின் வர்த்தகத்தையும், பொருளாதார நிலையையும் உயர்த்தக் கடமைப்பட்டிருப்பதாக எடுத்துக்கூறினார். இம்மகாநாட்டுக்கு கிட்டத்தட்ட 132 உலக தேசங்களிலிருந்து 2,500 பிரதிநிதிகள் சென்றிருந்தனர். இலங்கையின் பிரதிநிதியாக அரசாங்க மந்திரி ஜே. ஆர். ஜெயவர்த்தனு விஜயம் செய்துள்ளார். இம்மகாநாட்டின் பலனாக திடமான முடிவுகள் செய்யப்பட்டு, அவை பேச்சளவில் நின்றுவிடாது, செயற்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## சென் வின்சென்ற் டீ போல் சபைத் தூதுவர் மொறிஸ் கெனடி தம்பதிகளின் இலங்கை விஜயம்

சென்ற ஒருவாரமாக இலங்கையின் பல இடங்களையும் தரிசித்து இந்நாட்டுவறியவர்களுக்கு சென்வின்சென்ற் டீபோல் சபையினர் ஆங்காங்கே செய்துவரும் இகபர உதவிகளை ஆராய்ந்து அவற்றை எவ்வாறு பிறநாட்டவரின் உதவியுடன் துரிதப்படுத்தலாமென ஆலோசனை கொடுத்துவந்துள்ளார் அயர்லாந்து தேசத்தவராகிய திரு. மொறிஸ் கெனடியும் அவரது பிரிய பாரியாரும். திரு. கெனடி அயர்லாந்து தேசத்து வின்சென்ற் டீபோல் சபையில் ஒரு பிரபல்ய அங்கத்தவர். அவர் சென்றவாரம் யாழ்ப்பாணத்தில் தங்கிநின்ற நாட்களில் மேற்றிராசனத்தின் பல பாகங்களிலுமுள்ள வின்சென்ற் டீபோல் ஸ்தாபனங்களையும், பிரதான பள்ளிக்கூடங்களையும் தரிசித்து சொற்பொழிவாற்றி வறியவர்தொண்டில் யாவரையும் ஈடுபடுமாறு தூண்டிச் சென்றிருக்கின்றார்.

## "நான் இவ்வளவும் நிலைத்தது ஏன்"

சென்ற 55வருடகாலமாக வத்திக்கான் அமைப்பின்கீழ் உள்ள குருமாணவர் கல்லூரிகள் சர்வகலாசாலைகளின் தலைவராக விளங்கிய கருதினல் பிசாடோ அண்மையில் தமது பதவியினின்று ஓய்வுபெற்றுக் கொண்டாரல்லவா? அதன்பின் பத்திரிகை நிருபர் அவரைப் பேட்டி கண்டபோது நகைச்சுவையுடன் அவர் கூறியது "நான் சென்ற பல வருடங்களாக வேலைக்குப்போகாது விட்டநாள் என் நினைவுக்கு எட்டவில்லை. ஒருவர் தமது வேலைக்குப் போகாவிடில் அல்லவா அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை நியமிக்க வேண்டும். இதுவே நான் இவ்வளவு காலம் கியூறிசபையில் இப்பிரிவின் தலைவராக இருந்ததன் இரகசியம்" என்பதே.

## மறியலில் இருந்த கருதினல் ரப்போனி காலமாயினர்

சிரியன்பிரிவு கத்தோலிக்க கிறிஸ்தவ சபையில் அன்ரியோக் பிரதேச பிதாப்பிதாவாகிய கருதினல் ரப்போனி அடிகளார் தமது 89-ம் வயதில் பெயிறூற்நகரில் சென்றவாரம் காலமானார். இவருக்குக் கருதினல் பட்டம் 1935-ம் வருடம் அளிக்கப்பட்டது. தமது 33-ம் பராயத்தில் டமஸ்கஸ் நகர மேற்றிராணியார் பதவிக்கு உயர்த்தப்பட்டவர். 1914-ம்—19-ம் ஆண்டு நடந்த யுத்தத்தில் துருக்கியரால் துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களின் பெரும் பாதுகாவலராக விளங்கினர். ஆகவே துருக்கியர் கையிற் சிக்குண்டு மரணதண்டனை விதிக்கப்பட்டவர் எனினும் வத்திக்கானின் தலையீட்டினல் மரணதண்டனைசிறைத் தண்டனையாக மாற்றப்பட்டு சிலவருடகாலம் மறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

## "தங்க இருதய"ப் பரிசில்

கனடாதேச மொண்றியல் நகரின் முன்னுள் அதிமேற்றிராணியாரும், இப்போது ஆபிரிக்காவிலே குஷ்டரோகங்களின் மத்தியில் ஒரு மிஷனரியுமாகிய கருதினல் லெஜர் ஆண்டகையின் நன்மைத்தனத்தைப் பாராட்டுமுகமாக அவருக்குத் "தங்க இருதய"ப்பரிசில் சந்மானிக்கப் பட்டிருக்கிறது. இந்தப்பரிசில் 1943-ம் ஆண்டு ஓர் இத்தாலிய தொழிலதிபரான ஆஞ்ஜெலோ மொற்று என்பவரால் அடியிடப்பட்டது. இவரின் விதவையான பாரியார் "தங்கஇருதய"ப்பரிசிலுடன் கருதினல் ஆண்டகையின் பரோபகார தொண்டுகளுக்கென மேலதிகமாக அவருக்கு 4,000 பவுண் வழங்கியிருக்கின்றார்.

## விரதமிருந்து தருமதொண்டு

கல்கத்தாநகரிலே பசிபட்டினியால் வாடும் மக்களுக்கு உதவியாக இங்கிலாந்திலே வார்விக்ஷயர் விசாரணைப் பங்குக்குரவர் வண. பற்றிக் ஓ' மகோனி சுவாமியாரும், அவரது பங்குக் கிறீஸ்தவர்களும் வெள்ளிக்கிழமைதோறும் உபவாசமிருந்து சாப்பாட்டைக் குறைத்துச் சேமிக்கும் பணத்தை ஓர்உண்டியலில் போட்டு வைக்கின்றனர். அதனுல் வாரந்தோறும் உண்டியலில் 50 பவுண்வரை சேருகிறது. இந்தப்பணம் கல்கத்தாவிலே பட்டினியால் வாடுகிறவர்கள் மத்தியில் பரக்கத் தொண்டாற்றி வருகின்ற இளைப்பாறிய ஒரு பட்டாள அதிகாரியான மேஜர்டட்லி காடினருக்கு அனுப்பிவைக்கப் படுகிறது.

## டிலாசால் சபைச் சந்நியாசி மேற்றிராணியாரானர்

தூய ஆவியானவரின் சபைக்குச் சேர்ந்து குருப்பட்டம்பெற்ற முன்னுள் "கிறிஸ்தியன் பிறதர்" ஒருவர் நைஜீறியா தேசத்தில் மக்கூர்டி பிரிவு மேற்றிராணியாராக நியமனம் பெற்றிருக்கின்றார். இவர் எவரெனின் டொனல்ட்மாறேஅடிகளாரே இவருக்கு வயது இன்று 49. இவர் அயர்லாந்து தேசத்தவர். லிமறிக் நகரத்தில் பிறந்து, "கிறிஸ்தியன் பிறதர்ஸ்" பள்ளிக்கூடத்தில் பயின்று "கிறிஸ்தியன் பிறதராக"க் கடமையாற்றிவரும் காலத்தில் குரு அழைத்தலைப் பெற்றார்.

## இருதய மாற்று நடத்திய டக்றர் பார்னுட் பாப்பரசரைச் சந்தித்தார்

அண்மையில் தென் ஆபிரிக்க தேச டக்றர் பார்னுட்அவர்கள் தாம் நடத்திய இருதயமாற்று சிகிச்சையினுல் உலகப்பிரசித்தி அடைந்திருப்பதை யாவரும் அறிவர். சென்றவாரம் டக்றர் பார்னுட் வத்திக்கானுக்குச் சென்று பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பரைத் தரிசித்துக் கொண்டார். இருவரும் மிகஅன்புடன் பல நிமிஷங்கள் அளவளாவிக்கொண்டனர். சம்பாஷணையின்போது டக்றர் பார்னுட் தமது தகப்பனுர் ஒரு கிறிஸ்தவ பாதிரியார் என்றும், தாமும் ஆன்மகருமங்களில் பெரிதும் கவனம் செலுத்திவருபவரென்றும், தாம் நடத்திய சிகிச்சைகள் முறையானவை என தாம் முடிவு செய்ததன் பின்பே அவற்றை நடத்தியதாகவும் எடுத்துக் கூறினுர். இவ்வாறு அவர் எடுத்துக் காட்டியதற்குக் காரணம் இருதயமாற்றுச் சிகிச்சை முறையற்ற சிகிச்சைஎனச் சிலர் கூறிவருவதேயாம்.

## நாஸிகள் பலியெடுத்த குருமார்

ஜேர்மனிதேச டாச்சோஎனுமிடத்தில் இருந்த நாஸிய கூட்டடைமுகாமிலே சிறைவைக்கப் பட்டிருந்த குருமாரில் 39சதவிகிதமானேர் கொல்லப்பட்டனரென்றசெய்தியை ஆக்ஸ்பேர்க்நகரில் பிரசுரமாகும் "உல்றிச்ஸ் பிளாற்" என்ற மேற்றிராசன பத்திரிகை முதன்முறையாக இப்போது வெளியிட்டிருக்கிறது. டாச்சோ இன்று பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 1,106குருமாரின் சேமக்காலையாக இருந்துவருகிறது. இவர்கள் எல்லோரும் அதிலே சிறைவைக்கப் பட்டிருந்தார்கள். இவர்களில்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## பாலர் தினம் 25-2-68 ஞாயிறு

## ஒற்றுமை இயக்கத்துக்கு எதிர்ப்பு

கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமை வளர்ச்சிக்கு பெரும்பாலான கிறிஸ்தவர்கள் உழைத்துவருவது உண்மையே. எனினும் சில சில இடங்களில் எதிர்ப்பு இல்லாமல் இல்லை, இவ்வருடம் இங்கிலாந்தில் இரு இடங்களில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதாக அந்நாட்டுப் பத்திரிகைகள் கூறுகின்றன. கிளாஸ்கோ நகரத்தில் ஒற்றுமைச்சடங்கு அந்நகர அங்கிளிக்கன் தேவாலயத்தில் நடந்துகொண்டிருந்தது. கத்தோலிக்க அதிமேற்றிராணியார் பிரசங்கம் செய்யக் குறிக்கப்பட்டிருந்தார். அவர் பிரசங்கக்கூடு சென்றதும் சில பாகங்களிலிருந்து "வெளியேபோய் விடும்" என்று கூக்குரல்கள் எழுப்பப்பட்டன. குழப்பக்காரர் அகற்றப்பட்டபின் அதிமேற்றிராணியார் பிரசங்கம் செய்தார். இதுபோலவே லிவர்ப்பூல்நகர அங்கிளிக்கன் தேவாலயத்தில் ஒரு பிறிஸ்பிற்றேறிய பாதிரியார் சத்தமிட்டார். அமைதி நிலவியதும் சடங்குகள் நடத்தப்பட்டன. எதிர்ப்பில்லாது எம்முன்னேற்றமும் காண முடியாதது இயற்கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**மாசி மாதம் — 1968**

| | | | |
|---|---|---|---|
| 18 | ஞா. | முன்தவக்கால 2-ம் ஞா. | ஊ |
| 19 | தி. | கிழமைப்பூசை | [ஊ] |
| 20 | செ | கிழமைப்பூசை | [ஊ] |
| 21 | பு. | கிழமைப்பூசை | [ஊ] |
| 22 | வி: | புனித இராயப்பரின் தலைமைப்பீடம் | [வெ] |
| 23 | வெ. | புனித தமியான் இராயப்பர் | [வெ] |
| 24 | ச. | சனிக்கிழமையில் புனித மரியன்னையின் பூசை | [வெ]. |


# சத்தியவேத பாதுகாவலன்

1968-ம் ஆண்டு மீ மாசி 17-ந்வெ


## மறைக் கல்வி

சில வருடங்களுக்கு முன்பு வரை மறைக்கல்வி ஒரு பிரச்சினையாயிருக்கவில்லை. கத்தோலிக்க பாடசாலைகளில், கத்தோலிக்க சூழ்நிலையில், தினந்தோறும் ஞானோபதேச அறிவு புகட்டப்பட்டது மட்டுமல்லாமல் வேத அனுசாரங்களும் கவனிக்கப்பட்டுவந்தன. பிள்ளைகளுக்கு அடிப்படையான வேத அறிவு ஓரளவு இருந்துவந்தது. ஆனால், அப்போதும் நிலைமை பூரண திருப்திகரமாக இருந்ததென்று சொல்லமுடியாது. பல சிறுவர் வற்புறுத்தலின்நிமித்தம் ஏனையபாடங்களைப் போல ஞானோபதேசத்தையும் மனனம் செய்துவிட்டுப் பாடசாலையைவிட்டு விலகியதும் அதைக் காற்றில் பறக்கவிட்டு விடுகின்றனர். இதற்கு அவர்களுக்கு அளிக்கப்பட்ட கல்விமுறையும் பாடசாலைவிட்டு நீங்கிய இளைஞர்களுக்குத் தொடர்ந்துகல்வியூட்ட வாய்ப்பில்லாததும் காரணமாயிருக்கலாம்.

இன்றைய நிலை முன்னைவிடத் திருப்திகரமானது என்று சொல்லமுடியாது. பாடசாலைகளிற் கூடப் போதிய அளவு மறைக்கல்வி போதிக்க வாய்ப்பில்லை. எனவே, நாம் இன்று புதிய வழிகளைக் கையாள வேண்டியவர்களாயிருக்கிறோம். வேத அறிவைப்பரப்புவதில்குடும்பம், பாடசாலை, விசாரணைப் பங்கு, கத்தோலிக்க இயக்கங்கள் யாவும் ஒன்றித்துச் செயல்பட்டாற்றான் அது பயனளிக்கக் கூடியதாயிருக்கும்.

உண்மையில் குடும்பமே ஒரு குழந்தையின் முதற்பாடசாலை. தாயின் மடியிலேயே குழந்தை கிறிஸ்தவ சீவியத்தின் அடிப்படைகளை அறியவருகிறது. பெற்றோரின் உபதேசங்களைவிட அவர்களின் செயல்களே குழந்தையின் மனதில் ஆழப்பதிகின்றன.

பாடசாலை பிள்ளைகளின் மறைக்கல்வியைப் பொறுத்தமட்டில் முக்கியபாகம் வகிக்கிறது. தகுந்த சூழ்நிலை இருந்து தம் கடமையுணர்ந்த சிறந்த ஆசிரியர்களும் வாய்த்துவிட்டால் பாடசாலைப்படிப்பு வெறும் ஏட்டுக் கல்வியாக இராது அவர்களது வாழ்வை வளப்படுத்தக் கூடியதாக அமையும். அவ்விதம் பாடசாலையில் மறைக்கல்வியைப் பெறமுடியாத மாணவருக்கு விசேஷ வகுப்புக்கள் பல விசாரணைப்பங்குகளிலும் வைக்கப்படுகின்றன. ஆனால், வேத அறிவு யாருக்கு அவசியமாயிருக்கிறதோ அவர்கள் பெரும்பாலும் இவ்வகுப்புகளுக்குச் சமுகம் கொடுப்பதில்லை. அவர்களை வகுப்புகளுக்கு அனுப்புவதில் கத்தோலிக்க இயககங்கள் துணை புரியலாம்.

வாழ்க்கைக்குத் தேவையான மறைக்கல்வி முழுவதையும் ஒருவர் பள்ளிப்பருவத்திலேயே அறிந்துவிட முடியாது. பல காரியங்களை விளங்கிக்கொள்வதற்கு மன முதிர்ச்சி வேண்டும். ஆகவே, வாலிபர் மத்தியில் வேத அறிவைப் பரப்புவதற்கும வழிவகைகள் வேண்டும். வளர்ந்தோர் அறிவும் முன்னேறிக்கொண்டே இருக்கவும் ஆவன செய்யப்பட வேண்டும்.

மறைக் கல்வியை ஒருவர்மீது பலவந்தமாகத் திணிக்கமுடியாது. அதை அவர் விரும்பிநாடிவர வேண்டும். அப்படியானல் அது கவர்ச்சிகரமாக இருக்கவேண்டுவது இன்றியமையாதது. தனித்தனி அப்போஸ்தலத்துவத்தின் வழியாகவோ, பெருந்தொகையினரை அண்டக்கூடிய பத்திரிகை, வானெலி, படக்காட்சி மூலமாகவோ அறிவு பரப்பப்படலாம். திருவழிபாடும் இதற்கு ஒரு சாதனமாக விளங்கலாம். முறை எதுவாக இருப்பினும் அது மக்கள் மனதை வசீகரிக்கக் கூடியவிதத்தில் அமைதல்வேண்டும்.

# புனித இராயப்பர் - சின்னப்பரின் 19-ம் நூற்றண்டு மரண நிறைவு

இவ்வையகத்தின் புனித இராயப்பர்— சின்னப்பரின் பலவித துணிகரமான செயல்களுக்கெல்லாம் தூண்டுகோலாக இருந்தவர் யார்? வேறு யாருமல்ல, எமது ஆண்டவர் கிறீஸ்துவே. இப்புனிதர்களின் செயல்கள், நடவடிக்லைககள் யாவும், “ஐந்தாம் நற்செய்தி” எனப்படும் அப்போஸ்தலர்கள் நடபடி ஆகமத்தில் நிறைந்து வழிகின்றன. கிறீஸ்து: “நான் உலகம் முடியுமட்டும உங்களோடிருப்பேன்” என்று எமக்களித்த வாக்கை, தமது அப்போஸ்தலர்களின் செயல்களை ஆட்கொண்டு, நிறைவேற்றுகின்றார். கிறீஸ்து தமது இவ்வுலக வாழ்க்கையைத் திருச்சபையின் மூலம் நீடிக்கின்றார். புனித லூக்காஸ் தனது நற்செய்தியை எழுதினபின்பு அப்போஸ்தலர் ஆகமத்லைதத் தனது நற்செய்தியின் தொடர்ச்சியாக எழுதினார். இந்நூலில் எமது தாயாம் திருச்சபையின் உற்பத்தி, வளர்ச்சி என்னும் அம்சங்களைப் புனித லூக்காஸ் விளக்கியுள்ளார்.

### திருச்சபையின் ஆரம்பம்

புனித லூக்காஸ் இந்நூலின் (அப்போஸ்தலர் நடபடி) 2-ம் அதிகாரம்: 1—11-ம் வசனங்களில் திருச்சபையின் ஆரம்பத்தை அதிகார பூர்வமாக எடுத்துக் கூறுகின்றார். மேலும் அவர் திருச்சபையின் ஆரம்பத்தைக் கிறீஸ்துவின் பிறப்போடு உண்டானது என்கிறாரா? அல்லது திருச்சபையின் பிறப்பு, “கிறீஸ்து உற்பவத்தின் பரம இரகசியத்தோடு” தொடர்பு கொண்டுள்ளது என்கிறாரா? எது எவ்விதமாயினும் கிறீஸ்து உற்பவிக்க உதவிய அதே தூயஆவிதான் திருச்சபையையும் ஆரம்பித்து வைத்தார். “தூய ஆவியானவர் உம்மேல் எழுந்தருளுவார்...” என்று தேவதூதன் கன்னி மரியாளுக்குக் கூற, தேவசுதன் மனிதன் ஆனர். அதே தூய ஆவிதான் திருச்சபையின் ஆரம்பத்தில அப்போஸ்தலர்கள் மேலிறங்கினர். “தூய ஆவி அவர்கள் மேலிறங்கி... அவர்கள் அவரால் நிரப்பப்பெற்றார்கள்” (அப். நட. 2 : 2—4).

புனித லூக்காஸ்டைய நற்செய்தியில் கடவுளின் மனித அவதாரத்திற்குப் பின்பு தூய ஆவியினுல் நிரம்பப் பெற்ற யாபேரும் தேவதோத்திரக் கீதங்கள் பாடினார்கள். உ-ம்: மரியாய் “மகிமையின்” சங்கீதத்தைப் பாடினள். சக்கரியாஸ் தேவ தோத்திர சங்கீதத்தையும், சிமியோன் பாலனைக் கண்டபின், “ஆண்டவரே, என்னைச் சமாதானத்தோடு போகவிடும்” என்ற சங்கீதத்தையும் பாடினார்கள் என வாசிக்கின்றோம். இவர்கள் யாபேரும் தூயஆவியினல் தூண்டப்பட்டே தேவனைப் புகழ்ந்து பாடினார்கள்.

இதே விதமாக அப்போஸ்தலர்கள் நடபடியிலும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள், திருவுரைகள் யாவும் தூயஆவியினல் தூண்டப்பட்டு கடவுளின் உன்னத செயல்கள் யாவையும் எடுத்து உலக மக்களுக்கு அறிவிக்கின்றன. கடவுளின் உன்னத செயல்கள் இவ்வுலகில் நாள்தோறும் பலவித மக்களுக்கிடையில் நிகழ்கின்றன. இவ்வித செயல்கள் யாவையும் கண்டுபிடித்து உலகிற்கு அறிவிப்பதே திருச்சபையின் இவ்வுலக சேவைகளில் ஒன்றாகும்.

### கிறீஸ்து திரும்பவும் திருச்சபையில் செயலாற்றுகின்றார்.

அப்போஸ்தலர்கள் நடபடி 3-ம் அதிகாரத்தில் புனித இராயப்பர் முடவன் ஒருவனைக் குணமாக்கியதை எமக்கு அறிவிக்கின்றார் புனித லூக்காஸ். எவ்விதம் புனித இராயப்பர் குணப்படுத்தினார்— யாருடைய அதிகாரத்தைக் கொண்டு குணப்படுத்தினார்? தனது குருவாம் கிறீஸ்து பலரைக் குணப்படுத்தியதைக் கண்டிருப்பார் புனித இராயப்பர். உ-ம்: கிறீஸ்து இராயப்பரின் மாமியாரைக் குணப்படுத்தினார்; ஜெயிறசின் மகளைக் குணப்படுத்தினார்; வாதக்காரனைக் குணப்படுத்தினார். இவர்கள் யாபேரையும் கிறீஸ்து தமது கைகளினல் தூக்கிக் குணப்படுத்தினார். அதேபோல் புனித இராயப்பரும் கிறீஸ்துவின் பெயரால், முடவனைக் கைகளினல் தூக்கிக் குணப்படுத்தினார். கிறீஸ்து இவ்வுலகில் புரிந்த கருணைச் செயல்கள் யாவும் புனித இராயப்பரின் உள்ளத்தில் நன்ருகப் பதிந்திருக்க வேண்டும். ஏனெனில, தனது குருவின் அதே செயல்களைத்தானும் திரும்பப் பலமுறைகளில செயல்படுத்தித் தனது குருவாம் கிறீஸ்துவைத் திருச்சபையில் உலக முடியுமட்டும வாழச் செய்திருக்கின்றா. கிறீஸ்து இவ்விதமாகத் தமது புனித ஊழியர்களின் மூலம் திருச்சபையில் உலக முடிவுமட்டும் வாழ்நது வருகின்றார்.

கிறீஸ்துவின் செயல்களைக் கண்ட சனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். “இதினல் எல்லோரும் பிரமிப்படைந்து சர்வேசுரனைத் தோத்திரித்தருமன்றிப் பயம் நிறைந்தவர்களாய் ஆச்சரியத்துக்குரியவைகளை இன்று கண்டோம்” என்றார்கள் (லூக். 5 : 26). இதேபோல் புனித இராயப்பரின் செயல்களைக் கண்டு சனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். “அலங்கார வாசலிலே பிச்சைக்காக உட்கார்ந்திருந்தவன் இவன்தான் என்று அறிந்து இவனுக்குச் சம்பவித்ததைதப்பற்றி ஆச்சரியப்பட்டுப் பிரமிப்பு அடைந்தார்கள்” (அப். நட. 3 : 10). நற்செய்தி ஏட்டிலும், அப்போஸ்தலர்கள் நடபடியிலும் உள்ள பல அம்சங்களை எடுத்து ஆராய்வோமானல், அங்கே ஒற்றுமையின் பல அறிகுறிகளைக் காணலாம். இதிலிருந்து யாம் கவனிக்கக்கூடியது யாது? அப்போஸ்தலர்கள் நடபடியில் நாம் காணும் சம்பவங்கள் யாவும் நற்செய்திகளின் தொடர்ச்சி என்பதைக் காட்டுகின்றன. கிறீஸ்துவின் இவ்வுலக வாழ்க்கை அவரது மரணத்திற்குப் பின்னும் அப்போஸ்தலர்களின் நடபடிக்கைகளில் தொடர்கின்றது. கிறீஸ்துவே அப்போஸ்தலர்களுடைய செயல்களின் காரணகர்த்தா. கிறீஸ்துவே புதிய மனித சந்ததியாகிய திருச்சபையின் தலைவர். இப்புதிய சந்ததியின் மக்களாகிய எம் எல்லோரின் மூலமாக இவ்வுலகில் கிறீஸ்து வாழ்கின்றார். புனித இராயப்பரும், சின்னப்பரும் இப்புதிய திருச்சபையின் வச்சிரத் தூண்களாயிருந்து கடவுளின் இப்புதிய சந்ததியைத் தாங்கி வழி நடத்தினர்கள். கிறீஸ்துவே “இரண்டாம் ஆதாம்”. அவர் தனது அதிமிக பிறர்சிநேகத்தினலும், தாழ்மையினலும் வலியற்ற பாவச் சார்புள்ள மனித சமுதாயத்திடம்— “என் எலும்புகளின் எலும்பும், என் மாமிசத்தின் மாமிசமுமாயுமிருக்கின்றது” எனத் தெரிந்துகொண்டார். இதுவே, “திருச்சபையின் பரம இரகசியம்” என இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறிற்று.

எமது “விசுவாசத்தின் பரம இரகசியம்” இதுவே. நாம சந்தோஷமாயும், அக்களிப்போடும் தூய ஆவியினுடைய உதவியோடு இந்த “விசுவாசத்தை”ச் சீவிக்க இப்புனிதர்களின் 19-வது நூற்றண்டு மரண நிறைவின் வருடத்தில— “விசுவாச வருடத்தில்”— எமது தாயாம திருச்சபையினல் அன்புடன் அழைக்கப்படுகின்றோம்.

மூலம்: பியோ பத்திநாதர் சுவாமி, யே. ச.

தமிழாக்கம்: சகோதரர் ஜோர் ஜோனியஸ்

---

பம்பாய்நகரிலிருந்து நியூயோக் நகருக்குப் புறப்பட்ட ‘எயர் இந்தியா” போயிங் விமானம் புறப்பட்டுமேலெழும் போது விமானநிலையத்துள்சென்ற இரு மாடுகள் அதனுடன மோதிக்கொண்டன. அதனுல் விமானம் சேதமடைந்தது. இந்தச் சேதமதிப்பு ஏழுலட்சம் ரூபாவெனக் கூறப்படுகிறது. மாடுகள் மோதியமையால அதன இரக்கை, எஞ்சின், சக்கரம் ஆதியன பழுதடைந்தன.


* * *

சந்திரனுக்கு ஆட்களை அனுப்பி வைக்கும் போட்டியில் ருஷியாவும், அமெரிக்காவும் இன்று தீவிரமாக ஈடுபட்டுவருகின்றன. இந்தப்போட்டியில் அமெரிக்காவை ருஷியா முந்திவிட்டதாக அமெரிக்க தேசியவான வெளி ஆராய்ச்சிஸ்தாபன தலைவர் திரு. ஜேமஸ் ஈ வெப் தெரிவித்திருக்கின்றார்.

* * *

இத்தாலியிலே வருகிறபங்குனி மாதம் 24ஆம்திகதியிலிருந்து திவ்விய பூசைமுழுவதும் லத்தீன்பாஷையிலேயே நிறைவேறவிருக்கிறது. இப்பொழுது “கனன்” மட்டும் லத்தீன் பாஷைபிலே சொல்லப்படுகிறது. இத்தாலியபாஷை நடைமுறைக்கு வந்தும் குருமார் தனிப்படநடத்தும் பிரத்தியேக பூசைகளில்மாத்திரம் லத்தீன் பாவிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்புத் தம்பி - தங்கையருக்கு வணக்கம் !**

அர்ச். அந்தோனியார் ஒருநாளாவது தமது சீவியகாலத்தில் திவ்விய பூசை காணத்தவறமாட்டார். திவ்விய பூசைப்பலியின்மேல் அபாரபக்தி யுள்ளவர். பூசைகாணுதநாளில் செய்யும் வேலைகள் ஒன்றும் அவருக்குச் சரியாகச் செய்யமுடியாதது போல இருக்கும். அவர் மடத்தில் இருந்த பொழுது அன்று ஒருநாள், அவருக்கு வேலைசெய்யும் முறைவந்தது. பூசைக்குப் போகாமல் வேலை செய்யவேண்டும். கோவிலுக்கு அருகாமையில் நின்று வேலை செய்து கொண்டிருந்தார். பூசை எழுந்தேற்ற நேரம். இன்று நான் பூசை காணமுடியவில்லையே கடவுளே, நான் பூசை காண உதவி செய்யும் என்று மன்ருடினுர். உடனே அவரை மறைத்திருந்த கோவிற் சுவர் விலக, எழுந்தேற்ற நேரம் அவர் தேவநற்கருணையை ஆராதித்தார் என்று அவருடைய சரித்திரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. பின்பு மீண்டும் சுவர் மூடிக்கொண்டதாம். அவரைப்போல் நாமும் திவ்விய பூசைப்பலியில் அதிகபக்தியுடையவர்களாக முயலுவோம்.

— அண்ணு.

## திருவள்ளுவர்

—சி. சுதந்திரராஜா—

தெள்ளு தமிழ்த்திருக் குறளை நமது
உள்ளங் கவர உரைத்த உத்தம
வள்ளுவ வேந்தனை வாயாரப் பாடிடத்
துள்ளி வருவீர் என்னருமைத் தோழர்காள்.

சுந்தரச் சொல் லாட்சி செலுத்தியே
வந்தனைக் குரிய நல்வாழ்வு வழிகோலி
மந்திரமு மொழிந்திடா மாபெரு மொரு
எந்திர சக்தியால் ஈரடிக்கவி செய்தனனே.

எண்ணற்ற ஏற்றமிகு ஐயங்களுக் கெலாம்
வண்ண வண்ண விடைபல வுரைத்து
விண்ணள வுயர்ந்த பண்ணரசனின் நன்னூலே
மண்ணுலக மெங்கணும் மங்காத் தீபமன்றே.

முப்பெரும் நெறியினை நிலை நிறுத்தி
எப்பிரிவின ருமென்று மேற்றிட வல்ல
ஒப்பிலா ஒருயரியப் பெட்டக மிதனைத்
தப்பாது கற்றுத் தாரணியி லுயர்வோம்.

## சாரணரியக்கத் தாபகர்

# சேர் றெபேட் பேடன் பவல்

அ. யேசுதாசன், குருநகர்.

சாரண இயக்கத்தின் தந்தை; உலகப் பிரதம சாரணர் என்றெல்லாம் போற்றப்படும் அந்தப் பெருமைக்குரிய பிரபு யார்? அவர்தான் இன்று 30 இலட்சத்துக்கு மேற்பட்ட சாரணர்களை உருவாக்கினவரும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவைகளை உள்ளடக்கமாகக் கொண்டு சீரிய முறையில் செயலாற்றிவரும் 'சாரணர் இயக்கத்தை'த்தோன்றவழிவகுத்தவருமான சேர். றெபேட் பேடன் பவலாகும். நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக விளங்கவிருக்கும் இன்றைய இளஞ்சிறுர்களின் பசுமையான உள்ளங்களில் நல்லெண்ணம், பரஸ்பர ஒற்றுமை என்பவைகளை ஏற்படுத்தவும், பொதுத் தொண்டு புரியும் உன்னத பணியை உலகுக்கு எடுத்துக் காட்டவும் உறுதுணையாயிருந்த உத்தமர். உலகில் சகோதரத்துவத்தை ஏற்படுத்திச் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கு ஒரு பங்கு துணையாயிருந்தவராக இவர் கருதப்படுகிருர்.

இங்கிலாந்தில் லண்டன் மாநகரிலே 1857-ம்ஆண்டு பெப்ரவரிமாதம் 27-ந்திகதி பிறந்த இவரது முழுப் பெயர் 'சேர். றெபேட் ஸ்ரீபன்சன் ஸ்மித் பேடன் பவல்' என்பதாகும், லண்டன் ஒக்ஸ்போட் சர்வகலாசாலையிலே பேராசிரியராக இருந்த எச். ஜி. பேடன் பவல் என்பவரே இவர் தந்தையாகும். பிரித்தானியக் கடற்படைத் தளபதியான டபிள்யூ. ரீ. ஸ்மித் என்பவரது மகளே இவர் தாயாகும். மூன்ருவது வயதில் தந்தையை இழந்ததினுல் பலகஷ்டங்களுக்கு ஆளானுர். 1870-ம் ஆண்டு பேடன் பவல் லண்டனிலிருந்த 'சாட்டர்கவுஸ்' கல்லூரியில் உபகாரச் சம்பளம் பெற்றுப் படிக்கச்சேர்ந்து, 19-வது வயதில் பட்டம் பெற்று, உடனே இராணுவத்தில் சேர்ந்தார். பின்னர் குதிரைப் படையின் உபதளபதியாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு, அங்கு பணியாற்றிப் புகழடைந்து 26-வது வயதில் தளபதியானுர்.

1887-ம் ஆண்டில் ஆபிரிக்காவிலே 'சுலு'; 'அஸாந்தியர்,' 'மிலேச்ச மடோபிளி' போன்ற சாதியினருக்கு எதிராகப் பெரும் யுத்தங்களை நடத்தினுர். இவருடைய ஆண்மையும், சாரணீயத் திறனும், சுவடு தொடரும் தன்மையும் அந்த யுத்தங்களில் வெளிப்பட்டது. இதனுல் சுதேசிகள் இவரைத் 'துயில் கொள்ளாத ஓநாய்' என்ற பொருளைக்கொண்ட 'இம்பீசா' என்னும் வார்த்தையினுல் அழைத்தார்கள். 1899-ம் ஆண்டு உபதளகர்த்தர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். தென்னுபிரிக்காவில் குழப்பம் ஆரம்பித்தபோது 'மேப்கிங்' நகரைப் பாதுகாத்துக் கொடுத்தமையினுல் பாராட்டுகள் பெற்று 'மேஜர்—ஜெனறல்' பதவியை அடையும் வாய்ப்பைப் பெற்ருர். இதன் பின்னர் தென்னுபிரிக்காவிலிருந்து பெரும் புகழுடன் வெற்றிவீரனுக 1901-ல் தாய்நாடு திரும்பினுர்.

தென்னுபிரிக்காவிலிருந்து தாய்நாடு திரும்பிய பேடன் பவல் பிரபு உலகின் எதிர்காலச் சிறுர்களின் நலனை உத்தேசித்து அவர்கள் ஆண்மையுடையவர்களாகத் திகழ்வதற்கு வேண்டிய வழிவகைகளை ஆராய்ந்து வந்தார். இந்தியா, ஆபிரிக்கா போன்ற இடங்களில் தாம் பெற்ற அனுபவங்களையும், சிறுவர்களுக்கான பல நூல்களைப் படித்ததினுல் பெற்ற கருத்துக்களையும் மூலமாகக் கொண்டு இளைஞர்களுக்கான சாரணீயக் கொள்கையை ஏற்படுத்தினுர். இக்கொள்கையைப் பரீட்சிப்பதற்காக முதன் முதலில் சாரணர் பாசறை வாசத்தை இங்கிலாந்துகால்வாயிலுள்ள 'பிரவுண்ஸ்' தீவிலே இருபது சாரணர்களுடன் பேடன்பவல் ஆரம்பித்தார். இப்பாசறை வாசம் ஆரம்பத்திலேயே அவருக்குப் பெரும் வெற்றியைக் கொடுத்தது. இதன் தீவிர வளர்ச்சியைக் கண்ட பேடன் பவல், இராணுவத்தில் தான் வகித்துவந்த உயரிய மேஜர் — ஜெனறல் பதவியைக்கூடவிட்டு விலகிச் சாரணீயத்தைச் சிறுவர்பால் ஊக்குவிப்பதையே தமது வாழ்க்கையின் தொண்டாகக்கருதி, உலகவாழ்வின் இரண்டாவது அத்தியாயத் தொடக்கத்தில் காலடி எடுத்து வைத்தார்.

சாரண இயக்கம் ஓர் உலக இயக்கமாக மாறுவதற்காகப் பேடன் பவல் உலகின் பல பாகங்களிலும் சுற்றுப்பிரயாணங்கள் செய்தார். இதனுல் பல நாடுகளிலுமுள்ள சாரணர்களைச் சந்தித்துப் பேசும் வாய்ப்புக்கிட்டியது. முதல் உலகச் சாரணர் சம்மேளனம் 1920-ல் லண்டனில் கூடியபோது அங்கு பேடன்பவல் 'உலகப் பிரதமசாரணர்' என்று பிரகடனம் செய்யப்பட்டார். சாரண இயக்கத்தின் பணியும், வளர்ச்சியும் நாளுக்கு நாள் ஓங்கி வருவதைக் கண்ட ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் பேடன்பவலைக் 'கில்வெல் பேடன் பவல் பிரபு' என்று பட்டம் சூட்டிக் கௌரவித்தார். இதைத் தொடர்ந்து 1924-ல் டென்மார்க்கிலும், 1929-ல் இங்கிலாந்திலும், 1933-ல் ஹங்கேரியிலும், 1937-ல் ஒல்லாந்திலும் உலகச் சாரணர் சம்மேளனங்கள் நடைபெற்றன.

'செயற்கரிய செய்வர் பெரியர்' என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்கும் பேடன்பவல் பிரபு உதைபந்தாட்டம், நடிப்பு, சித்திரம், சங்கீதம் போன்ற கலைகளில் திறமையாளனுக விளங்கியிருக்கிருர். கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவின் முக்கிய அங்கத்தவராக இவர் கடமையாற்றியிருக்கிருர். கல்லூரியில் நடைபெற்ற நாடகங்கள் பலவற்றில் நடித்துப் பாராட்டுக்கள் பெற்றிருக்கிருர். தான் எழுதிய புத்தகங்களுக்குத் தேவையான சித்திரங்களை இவரே வரைந்திருக்கிருர்.

பேடன் பவல் பள்ளிச் சிறுவனுக இருந்த காலத்தில் ஓய்வு நேரங்களில் வனங்களுக்குச் சென்று வேட்டையாடியும், வனங்களிலுள்ள பறவையினங்களை அவதானித்தும், மிருகங்களின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து செல்வது முதலான செயல்களில் முழுதும் ஈடுபட்டு வந்தார். 'இப்படிப்பட்ட செயல்களும், அனுபவங்களும் சாரணீயத்துக்கு அவசியமானவை' என்று இவர் கூறுகிருர்.

இராணுவத்திற் சேர்ந்த பிறகு இந்தியா, ஆபிரிக்கா போன்ற இடங்களிலுள்ள காடுகளில் மிருகவேட்டையாடியும், கனடாவிலுள்ள காட்டுவாசிகளுடன் வாழ்ந்தும் வந்துள்ளார். 'இத்தகைய இன்பமான வாழ்க்கையை நான் மட்டும் அனுபவிப்பதனுல் பயன் என்ன? அதை மற்றவர்களும் அனுபவிக்க வேண்டும்' என்ற எண்ணமே சாரணர் இயக்கம் தோன்றக் காரணமாய் இருந்தது'' என அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

''இவ்வுலகத்தை நீங்கள் கண்டதிலும் பார்க்க ஓரளவாவது நல்ல நிலைமைக்குக் கொணர்ந்துவிடுதற்கு முயற்சியுங்கள். அப்பொழுது நீங்கள் இறக்குங்கால் உங்கள் பொன்னுன பொழுதை வீண்பொழுதாக்காது முடிந்த அளவில் திறம்பட உழைத்துள்ளதான திருப்தியான இன்ப உணர்ச்சியோடு இறக்க முடியும்'' என்று தமது சாரணச் சிறுவர்களுக்கு இதை இறுதி வேண்டுகோளாக விடுத்திருக்கிருர்.

பேடன்பவல் தமது இறுதிக் காலத்தைத் தம் மனைவியுடன் ஆபிரிக்காவில் 'கென்னியா' என்னும் அழகு வாய்ந்த பிரதேசத்தில் கழித்துவந்தார். 1941-ம் ஆண்டு ஜனவரி 8-ந் திகதியன்று அவர் இவ்வுலகைவிட்டு மறைந்தார். அவர் பூதவுடல் மறைந்தாலும் புகழுடம்போடு இன்றும் உலவுகிருர். நல்ல நெஞ்சங்கள் வாழ்கின்றவரை அவரும் உலகில் வாழ்வார்.

## வயிற்றில் நெருப்பு

ஓர் ஊரில் ஒரு செல்வன் இருந்தான். அவன் பெயர் அழகப்ப செட்டி. அவனிடம் ஒரு வேலைகாரனும் இருந்தான். வேலைகாரன் சிறு பையன். மிகவும் நல்லகுணமுடையவன். அழகப்ப செட்டியிடம் அளவு மிக்க அன்புடையவன். செட்டியார் ஏவும் வேலைகளை உடனே செய்து முடிப்பான். அழகப்பனும் அவனைத் தன் பிள்ளைபோல அருமையாக வளர்த்து வந்தான்.

செட்டியார் சுருட்டுக் குடிப்பது வேலைகாரனுக்குத் தெரியாது; சுருட்டுக் குடித்துக்கொண்டிருப்பதையும் ஒருநாளும் காணவுமில்லை. ஒருநாள் செட்டியார் சுருட்டுக்குடித்துக் கொண்டிருந்தார். அரைச் சுருட்டு எரிந்துவிட்டது. வேலைகாரப் பையன் அதைக் கண்டான்.

உடனே ஐயோ! ஐயோ!! என்று கூச்சலிட்டான். ஐயாவுக்கு வாயாலும் மூக்காலும் புகை வருகிறதே என்று சத்தமிட்டான். வயிற்றில் நெருப்பு இருக்கவேண்டும் என்று எண்ணினுன். குடத்தோடு நீரை எடுத்து செட்டியார் தலையிலே ஊற்றினுன்.

செட்டியார் திடுக்கிட்டெழுந்தார்; ஏன் இப்படிச் செய்தாய் என்று அதட்டினுர். ஐயா உங்கள் வாயாலும், மூக்காலும் புகைவந்தமையால் அவ்வாறு செய்தேன் என்று பையன் கூறினுன், செட்டியார் வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்தார்.

● முன்னுள் அமெரிக்கஜனுதிபதியான ஆபிரகாம் லிங்கன் அவர்கள் ஜோன் பூக்என்ற சதிகாரனுல் சுடப்பட்ட அன்றிரவு அணிந்திருந்த இரத்தக்கறைபடிந்த உடையானது அவர் கொல்லப்பட்ட இடமாகிய வாஷிங்ரன் நகரிலுள்ள புதுப்பிக்கப்பட்ட போட் தியேற்றருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இந்த உடை அப்போதுஏலத்தில் விடப் பட்டபோது 10,415பவுண்வரை விலைபோயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையகத்தின் வேந்தர்

[ செ. ஞானப்பிரகாசம், சே. ச. ]

(சென்றவாரத் தொடர்ச்சி)

## உயிர்ப்பால் உயர்த்தினர் இவ்வுலகின் மாண்பை :

"பூவுலகும் வானுலகும் கிறிஸ்துவோடு உயிர்த்தன" என்று பூரிப்படைகின்றார் புனித அமிர்தநாதர். அண்டம் முழுதும் மக்களுடன் கிறிஸ்துவின் மீட்பைப்பெற்றது. அதனால்தான் புனித பாசில் "ஒவ்வொரு படைப்பும் நம்முடன் மாற்றம் அடையும்" என்று கூறுகின்றார். ஏனெனில், கிறிஸ்து தம் பிதாவின் வலப்பக்கம் சென்றபோது மனிதனாக, உடல் ஆன்மாவுடன் இணைய ஏகுகின்றார். அதனால் இவ்வுலகுடன் கொண்ட அவரது தொடர்பு அறுந்து போவதில்லை.

"உலகு முடியும்வரை நான் உங்களுடன் இருப்பேன்" என்று கூறிய கிறிஸ்து இன்றும் நம்முடனிருந்து அலுவல்புரிகின்றார். இவ்வுலகுடன் கொண்ட அவரது ஐக்கியம் குலைபவில்லை. மனிதனோடு கிறிஸ்து தோளோடு தோள் நின்று ஆக்கவேலை புரிகின்றார். கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் இந்தக் கிறிஸ்துவை இன்றைய வரலாற்றில்,பண்பாட்டில், கலாச்சாரத்தில், கலையில், கண்டுபிடிப்புகளில், எண்ணத்தில், வாழ்வில், ஏன் இவ்வையகம் முழுமையிலும் அவதரிக்கச் செய்து உலகின் கதியை அடையத் துரிதப்படுத்துகின்றனர். "அதுவரைக்கும் (இறுதி நாள்) எல்லாப் படைப்புகளும் விம்மிப் பிரசவ வேதனைப்படுகின்றது" (உரோ 8 : 22) என்று புனித சின்னப்பர் கூறுகின்றார். இன்றைய கண்டுபிடிப்புகள், நாம்காணும் முன்னேற்றம் இவ்வேதனையை ஒருவாறு போக்கத் தோன்றியவையாகும் கிறிஸ்து இவ்வுலகை அதன் நிறைவுக்கு இட்டுச் செல்கின்றார். "அழிப்பதற்கல்ல, நிறைவேற்றுவதற்கே வந்தேன்" (மத்தேயு 5 : 17). அவனியில் நிகழும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கிறிஸ்து பெரும் ஈடுபாடு கொண்டுள்ளார். படைப்பு முழுமையும் ஒமேகா புள்ளியாகிய கிறிஸ்துவை நோக்கிச் செல்வதாக சார்தேன் அடிகள் கூறுகின்றார். "ஒரு பெரும் மனிதன், முழுக் கிறிஸ்து. கடந்து செல்லும் தலைமுறைகளில் பக்குவமடைந்து கொண்டிருக்கிறார்" என்று கூறி மகிழ்கிறார் புனித அகுஸ்தீனார்.

## உலகை மறுப்பதென்றால்

புளியம்பழக் கூடும் சதையும்போல உலகத்தோடு ஒட்டியும் ஒட்டாததுமாய் சார்ந்தும் சாராததுமாய் இராது, நகமும் சதையும்போலக் கிறிஸ்தவன் உலகோடு நெருங்கிய உறவுகொள்ளுதல் வேண்டும். இவ் உறவைத் துண்டித்துத் தனியே விண்ணகம் அடைதல் முடியாது. இச்சமயத்தில் கிறிஸ்தவன் மனத்தில் ஓர் ஐயம் உதிக்கின்றது. "உலகத்தை மறுக்கவேண்டுமென்று" திருச்சபை பன்முறை வலியுறுத்துகிறதே என்று கேட்கலாம். "எவன் தன் தந்தையையோ ... வெறுக்காதவன் எனது சீடனுயிருக்க முடியாது" என்று கிறிஸ்து மொழிகின்றாரே என்று கூறலாம். உலகை மறுப்பதென்றால் என்ன ? இவ்வுலகை முழுமை வாய்ந்த ஒன்றாகக் கருதுவதை ; மனித ஏக்கத்தை நிறைவுபடுத்தக் கூடிய ஒன்று என்று நம்புவதை ; அதனால் இவ்வுலகில் இறைவனுக்கு இடமளிக்கா மனப்பாங்கை மாற்றவேண்டுமென்பது இதன் பொருள். உலகம் தன்னிலே முழுமையின்றி நிறைவுக்காக விம்மிக்கொண்டிருக்கிறது. இவ்வுலகை முடிவடைந்த ஒன்றாக எண்ணி அதனை ஒட்டிக்கொள்ளும் பொழுது தான் சுயநலம், அதிகாரவேட்கை, மற்றவர்களை ஏமாற்றும் மனப்பாங்கு தலை எடுக்கின்றன. அப்பொழுது இவை அனைத்தையும் தனது தெய்வங்களாக மாற்றிக்கொள்ளுகிறான் மனிதன். இறைவனுடன் பகைமைகொள்கிறான். அதனால் உலகமறுப்பென்றால் படைப்புகளுக்கு வழிபாடு நடத்துவதை விட்டுவிடுதலாகும். இவ்விதம் அவன் வழிபடும் தெய்வங்கள் சொத்தாக இருக்கலாம். அல்லது சிற்றின்பம், கட்சிக்கொள்கை, அறிவு போன்றவையாக இருக்கலாம் இந்தக் கீழ்நிலையைத்தான் மாற்றவேண்டும். மேலும் மனிதன் மீட்கப்பட்டதால், அவனுடன் உலகமும் மீட்கப்படுகிறது. அதனால் மனிதன் தனது மீட்பைக் கருதாது பாபல்கோபுரத்தைக் கட்டியவர்கள்போல, தனது உழைப்பினால் வையகத்தின் மீட்பைமட்டும் கருதுவது மடத்தனமாகும். கடவுளின் பிரசன்னம் அனைத்தையும் ஊடுருவி, பேருண்மைகள் இப்பாரினில் பதுங்கிக் கிடத்தலால் பறக்கும் பறவையைப் போன்று இவ்வுலகை மேலெழுந்தவாரியாக நோக்குதலும் கூடாது.

## கடைசிக்காலம்

உலக இறுதி நாளைப்பற்றி நாம் கொண்டுள்ள கருத்தென்ன ? இறுதி நாளில் இறைவன் அனைத்தையும் அழித்துத் தாம் முன்னதாகத் தயாரித்துள்ள இடத்திற்கு இட்டுச்செல்வாரா ? அல்லது அவ்விடத்தை நமது ஒத்துழைப்புடன் தயார் செய்து கொண்டிருக்கிறாரா ? இவ்வுலகு இறுதியில் அழியுமா ? அல்லது முழுமையுறுமா ? மனிதனின் ஆவல், முயற்சி, உழைப்பு அனைத்தும் இறைவனின் திட்டத்தில் இடம் பெறுகின்றனவா ? அல்லது மனிதன் ஆற்றும் அலுவல் அனைத்தும் அவன் சோம்பலாக இருத்தலாகாது என்பதற்காக இறைவனால் கண்டுபிடிக்கப்பட்ட வழிகளா ? மனிதனின் நற்குணத்தைச் சோதிக்க எழுந்த சோதனைக்களமா இவ்வுலகு ? அல்லது பல சக்திகளைத் தேக்கி அவற்றை வெளிக்கொணர்வதின் வழி உயிர்த்த மன்பதைக்கு ஏற்ற இடமாக மாற்றி அமைக்க அளிக்கப்பட்ட ஒன்று ? மாலேவெஸ் என்ற அறிஞனின் கூற்றுப்படி, "மனிதன் இப்பொழுது இஞ்ஞாலத்தின்மீது காணும் வெற்றி, அரசியல் அமைப்புகள், கலை, பண்பாடு, அறிவியல் பொறியியல் வளர்ச்சி முதலியன கிறிஸ்துவை முழுமையுறச்செய்து, மகிமைநிறை மாற்றத்தை அடையவிருக்கின்றன."

இறுதி நாள் கிறிஸ்துவின் செயலை வெளிப்படுத்தும். மனித வேலையின் சின்னமாக இருக்கும் அப்பத்தில் சாய்ந்து கிறிஸ்து அதைத் தமது உடலாக மாற்றுவதுபோல, இறுதிநாளிலும் அவருடைய அருளினாலும், நம்முடைய உழைப்பினாலும் மாற்றப்பட்ட வையகத்தை ஏந்தித் தமது உடலாக மாற்றிக்கொள்வார். அப்பொழுது, "வாருங்கள் ; நீங்கள் தயாரித்த எனது அரசில் வாழுங்கள். நான் உங்களுக்காக ஆதியிலிருந்து தயாரித்த உலகு இப்பொழுது முழுமை அடைந்திருக்கிறது என்பார். அதனால் மக்களின் மகிமையில் பங்குபெற அனைத்தும் உண்டாக்கப்பட்டுள்ளன." சர்வேசுரனுடைய பிள்ளைகள் வெளிப்படுங் காட்சியைக் காணப் படைப்புகளெல்லாம் ஆவலோடு காத்துக்கொண்டிருக்கின்றன" (உரோ. 8 : 19). அழிவுக்காக எதனையும் படைக்கவில்லை இறைவன். ஆனால் வாழ்வுக்காகவே தோன்றியுள்ளன.

## விழுமிய உண்மை

அதனால் மனிதனின் அனைத்து அலுவல்களும், அவை வியப்பூட்டுபவையாக இருந்தாலும்சரி, சாதாரண அலுவல்களாக இருந்தாலும்சரி, உயரப் பறத்தலாக இருந்தாலும்சரி, வயலை உழும் செயலாக இருந்தாலும்சரி, அணுவைத் துளைத்து ஆய்வு நடத்துவதாயிருந்தாலும்சரி, [illegible] அலுவலாக இருந்தாலும்சரி [illegible]

[தொடர்ச்சி மறுபக்கம் பார்க்கவும்]

# "இங்கிலாந்து திருச்சபையின் தலைமைக் குரு திருமதி வாஹன்!"

கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களின் வாழ்விலே, குருக்களுக்கும் அவர்களுடைய தாய்மார்களுக்கும் இடையே ஒரு நெருங்கிய பிணைப்பும் உறவும் நிலவுவதைக் காண்கிறோம். இயற்கைப் பாசத்தால் தோன்றும் இயல்பான ஒன்றிப்புமட்டுமன்று அது. ஆன்மீகமானதுங்கூட ; பரிசுத்த மரியன்னைக்கும் அவளுடைய திருமகன் யாவருக்கும் மேலாக உயர்ந்த பெரிய குரு யேசுவுக்கும் இடையே நிலவும் இணையில்லாத ஒன்றிப்பைப்போன்று, இதுவும் முற்றும் புனிதமானது, போற்றுதற்குரியது.

நாங்கள் தேவ அழைத்தல் வரம் பெற்றதும் அதில் நிலைத்திருப்பதும் எல்லாம் தங்கள் தாய்மார்களின் செபத்தாலும் தபத்தாலும் உற்சாகத்தினாலுமே என்று, இன்று எத்தனையோ குருக்கள் சொல்லக்கூடும்.

ஓர் ஆங்கிலேயத் தாய் முப்பது ஆண்டுகள் அளவாகத் தினமும் திவ்ய நன்மை உட்கொண்டு, தன் மக்களுக்குத் தேவ அழைத்தல் வரத்தை அருளுமாறு செபித்துவந்தாள். இறைவன் அந்த அன்னையின் செபத்திற்கு எவ்விதம் செவிசாய்த்து அருளினார் பாருங்கள். அவளுடைய எட்டுக் குமாரர்களில் ஆறு பேர் குருக்களானார்கள். ஒருவர் மேதகு கருதினல் ஹொபெர்ட் வாஹன், இன்னொருவர் அதிமேற்றிராணியார், மற்றொருவர் மேற்றிராணியார். ஐந்து குமாரத்திகளில் நால்வர் கன்னியர் ஆனார்கள்.

பாப்பரசர் 13ஆம் சிங்கராயர், கருதினல் வாஹன் என்பவரை இங்கிலாந்தின் தலைமைக் குருவாக, முதல்வராக நியமித்தபொழுது "இங்கிலாந்தின் முதல்வர் திருமதி வாஹன் அவர்களே" என்று தன் தாய்க்குப் புகழ்மாலை சூட்டினார்.

நானும் தேவ அழைத்தல் வரம் பெற என் தாய் என்ன தவம் செய்தாள் என்பதைக் கடவுள் நன்கு அறிவார். முடக்குவாத நோயினால் இருபது ஆண்டுகள் என் அன்னை படுத்த படுக்கையானாள். என்னதான் பொறுமைசாலியாயிருந்தாலுங்கூட இருபது ஆண்டுகள் வேதனை, வேதசாட்சிகளுக்குக்கூடச் சங்கடமாகத்தானிருக்கும். அத்துணை வேதனைகளையும் தன் குமாரர்களில் ஒருவரை இறைவனின் குருவாகக் காணவேண்டுமென்ற ஒரு மேலான கருத்துக்காக ஒப்புக்கொடுத்தாள்.

என் அன்னையின் தியாகங்கள் வீணாகவில்லை. இதோ இன்று ஆண்டவன் என்னை ஒரு குருவாக உயர்த்தி ஆசீர்வதித்துள்ளார். தன் மகனின் முதல் திருப்பலியில் பங்குகொண்டு அவருடைய திருக்கரங்களாலேயே திவ்ய நன்மை உட்கொண்டபொழுது அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடிற்று. மகிழ்வும் நன்றியும் கலந்த ஆனந்தக்கண்ணீர் அது. புனித மோனிக்கம்மாளைப்போன்று என் தாயும், "நீர் எங்கிருந்தாலும்சரி, இறைவனின் பலிபீடத்தில் என்னை நீர் நினைவுகூரவேண்டும். இதுதான் உம்மிடம் கேட்பது" என்று வேண்டினாள்.

என் அன்புள்ள அன்னையே, நிச்சயம் நான் உம்மை மறவேன் !

இப்பொழுதுள்ள, இனிவரவிருக்கும் குருக்களின் தாய்மார்களைப்போற்றும் விதமாக இந்த ஒரு சில வரிகளை எழுதியுள்ளேன். "இறைவன் ஒரு குடும்பத்திற்கு அளிக்கக்கூடிய கொடைகளிலெல்லாம் மிகப்பெரும் கொடை, அந்தக் குடும்பத்திலிருந்து ஒருவரைக் குருவாகத் தெரிந்துகொள்வது" என்று புனித ஜான்பொஸ்கோ கூறிய மொழிகளை இந்தத் தாய்மார்கள்தாம் அதிகம் கண்டுணருபவர்கள்.

"கிறிஸ்தவ குடும்பங்களின் தாய்மார்களே ! உங்களுக்குத்தான் இந்த வேண்டுகோள் விடுக்கிறோம். ஏனெனில், நீங்கள்தாம் கிறிஸ்துவின் குருகுலத்தைப் பேணிவளர்க்கும் தனி உரிமை பெற்றவர்கள்."—மேதகு கருதினல் சுகார்டு.

**வண. பிதா ஜோர்ஜ் பலாக்பிள்ளை.**
(முன்னேடி)

---

● இங்கிலாந்திலும், உவேல்ஸிலுமுள்ள "வை. சி. டபிள்யு."என அறியப்படும் இளம்கிறிஸ்தவ தொழிலாளர்களில் அநேக அங்கத்தவர்கள் தங்கள்வருமானத்திலே இரண்டுசதவிகிதத்தை உலகின்பசிபட்டினியை எதிர்த்து நடத்தும் போராட்டத்துக்கு உதவி செய்வதாக உறுதிவாக்கு அளித்திருக்கிறார்கள். பிரித்தானியிலுள்ள இளம் கிறிஸ்தவ தொழிலாள அங்கத்தவர்களான 17,000பேரும் வாரம்ஒன்றுக்குச் சராசரிவீதமாக 2சிலின்கொடுத்தால் மொத்தம் 17,000பவுணாகும்.

● மாட்டின் லூத்தேரின் கடைசியானபிரசங்கங்கள் நடைபெற்றஇடமும், இப்போது கத்தோலிக்கருக்கும், புரொட்டஸ்தாந்தருக்கும் பங்குபாகமாய் இருப்பதுமான லீப்சிக்நகர சர்வகலாசாலைக்கோவில் கம்யூனிஸ்த கிழக்கு ஜேர்மன் அரசாங்கத்தால் இடிக்கப்படவிருக்கிறது. இது 13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. லூத்தேர் திருச்சபையை விட்டுப்பிரிந்த 450ஆம்ஆண்டுவிழா வருடத்தில் அதனை இடிப்பதையிட்டு பெரும்ஆட்சேபனை எழுந்திருக்கிறது.

● கனடாதேச மொண்றியல்நகர் அதிமேற்றிராணியார்பதவியை இராசினாமாச் செய்துவிட்டு ஆபிரிக்க குஷ்டரோகர்கள்மத்தியில் தொண்டாற்றவென்று புறப்பட்ட கருதினல்லெஜர் ஆண்டகை ஆபிரிக்கமறூண்நாட்டைச் சேர்ந்த யலோண்டிநகர்போய்ச் சேர்ந்திருக்கின்றார். அங்கே இவர் ஆறுமாதகாலம்தங்கியிருந்து அந்நகரின் சோலா அதிமேற்றிராணியாரின்கீழ் பயிற்சி பெறுவார். இவருக்குத் தற்பொழுது வயது 63.

● திருச்சடங்காசார திருச்சங்கமானது சுத்தவாளர்கள்ஐவருக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படுவதற்கான விசாரணையில் இன்றுஈடுபட்டிருக்கின்றது. இவர்களில் ஒருவர் சுவிற்சர்லாந்தைச்சேர்ந்த ஒருஇல்லறகத்தோலிக்கர். திருமணஞ்செய்து ஒன்பதுபிள்ளைகளுக்குத் தந்தையாக இருந்தவர். தமதுநாட்டிலே சகலருக்கும் சமயசுதந்திரம் பெற்றுக்கொடுக்குமாறு அயராதுழைத்த ஒருபெரும் பக்திமான். இவர் 1837ஆம் ஆண்டு பரமபதமடைந்தார்.

● புவோநிடாநகரில் வசிக்கும் ஜோர்ஜ் அல்பிறெற் என்பார்மேல் சுவர் ஒன்றுவிழுந்து அவரின் முதுகைக் காயப்படுத்தியதைத் தொடர்ந்து கட்டடகம்பெனி ஒன்றின்மீது வழக்குத் தொடர்ந்தார். வழக்குவிசாரணைமுடிவில் அது கடவுள்செயலென்று தீர்ப்பு வழங்கப்பட்டது இப்போது அவர் 25,000பவுண் நஷ்டஈடுகேட்டுக் கடவுளிலும், தான்வசிக்கும் பாம்பீச்சிலுள்ள 30கோவில்களிலும் வழக்குத் தொடர்ந்திருக்கிறாராம்.

● ஆஸ்திரேலியாவிலே முதன்முதலாகச் சென்றபுதுவருடப்பிறப்புத் தினத்திற்கு முதனாள் மூன்றுபெண்களும், இரண்டுஆண்களுமாக ஓரேபிரசவத்தில் ஐந்துகுழந்தைகளைப் பெற்றெடுத்த பற்றிசியா பிறஹம்எனும் மாதும், குழந்தைகள் ஐந்தும் சுகமாயிருக்கின்றனர். குழந்தைகளுக்கு ஆஸ்பத்திரிப் பால்வங்கியிலிருந்து தாய்மார்களின்பால் ஊட்டப்படுகின்றது. விசேஷதாதிமார் கோஷ்டி ஒன்று குழந்தைகளைக் கண்ணும்கருத்துமாகப் பராமரித்துவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாப்பரசர் 6-வது சின்னப்பரும் கொம்யூனிஸ்த றூமேனிய பிரதமரும்

சென்ற வாரம் றூமேனிய தேசபிரதமர் மோறர் இத்தாலிய தேசத்துக்கு விஜயம் செய்த போது, வத்திக்கானுக்கும் சென்று பாப்பரசரைச் சந்தித்து ஒரு மணித்தியாலமாக அவருடன் கதைத்துச் சென்றிருக்கின்றார். அவர்களது சம்பாஷணையில் றூமேனியாவில் திருச்சபையின் நிலைமையும் வியற்நாம் சமாதானமும் முக்கிய இடம் பெற்றனவெனக் கூறப்படுகின்றது. இன்று ஒரு மாதகாலத்துக்கு முதல் யூகோசிலேவிய பிரதமரும் இவ்வாறு பாப்பரசரைத் தரிசித்துப் பேசிக்கொண்டது நேயர்களின் ஞாபகத்தைவிட்டு அகன்றிருக்க முடியாது.

## நிபந்தனைகளுடன் குருப்பட்டம் பெற்ற புரொட்டஸ்தாந்த குரு

ஜேர்மனி தேசத்தில் பல காலமாக ஒரு அங்கிளிக்கன் சபைக்குருவாக தொண்டாற்றிவந்த ஹியூ அடிகளார் சமீபகாலத்தில் கத்தோலிக்க குருவாக நிபந்தனைகளுடன் அபிஷேகிக்கப்பட்டிருக்கின்றார். இது நடந்தது மூவென்ஸ்ரர் என்னும் நகரத்திலேயாம். இவர் முன்னர் முறையே திருச்சபையில் தெசண்டாற்றிப் பின்னர் பிரிந்துபோன ஒரு மேற்றிராணியாரால் அங்கிளிக்கன் சபையில் குருப்பட்டம் பெற்றிருந்ததே நிபந்தனைகளுடன் அவருக்கு கத்தோலிக்க குருப்பட்டம் அளிக்கவேண்டிய காரணமாயிற்று. அங்கிளிக்கன் சபையினராயிருந்தபோது பெற்ற குருப்பட்டம் முறையற்றதாயிருப்பின் இவருக்குக் குருப்பட்டம் அளிப்பதாக அபிஷேகித்த மேற்றிராணியார் கூறியருளினர்.

## கிறிஸ்மஸ் தபால் முத்திரைகள்

நமது ஆண்டவரின் திருஜனன ஞாபகார்த்தமாகச் சென்ற கிறிஸ்மஸ்காலத்திலே வத்திக்கான் தபால் நிலையம் மூன்றுஇனமான — மூவித பெறுமதியான மூன்று தபால்முத்திரைகளைப் பாவனைக்கு விடுத்திருந்தது. இத்தகைய தபால்முத்திரைகளை அது கிறிஸ்மஸ்காலத்திலே தொடர்பாக விடுத்திருப்பது இது ஒன்பதாவது முறையாகும். இந்த மூவின முத்திரைகளிலும் திருக்குடும்பத்தின் பிரதிமை பொறிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரதிமை வத்திக்கானின் அப்போஸ்தலிக்க நூல்நிலைய நூதன பொருட்காட்சிச் சாலையில் பூச்சியமாக வைத்துக் காப்பாற்றப் பட்டுவரும் ஒருபைசாந்தினிய சித்திரப்படத்தின் பிரதிரூபமாகும். முறையே 25-55-260லீர் — அதாவது 9சிலின், 12சிலின் 6பென்ஸ், 15சிலின் பெறுமதியுடைய இந்த முத்திரைகள் அதிகம் கவர்ச்சிகரமாய் இருந்தமையாலும், பெருந்தொகையாக அச்சிடப்படாமையாலும் சிலவாரங்களில் விலைப்பட்டுப்போயின.

## நாஸிகள் பலி.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

95சதவிகிதமானோர் கத்தோலிக்க குருமார். அங்குபோலிஷ்காரர் 1,856 பேரும், ஜேர்மனியர் 358 பேரும், செக்கோசிலவாகியர் 127பேரும், ஆஸ்திரியர் 100பேரும், பிரான்சியர் 135பேருமாக 2,576குருமார் சிறை வைக்கப் பட்டிருந்தார்கள்.

## யாழ்ப்பாணப் புதுமைமாதா

புதுமைமாதாகோவில் மிகப்புராதனமானது; 400ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டது. போர்த்துக்கேயர் 1580ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். உடன் ஒரு கோட்டையைக் கட்டினர். அக்கோட்டைக்குள்ளேயே தேவதாய்க்கு ஒரு கோவிலையும் (1662-ல்) அமைத்தனர். அக்கோவிலைப் புதுமை மாதாவுக்கு அர்ப்பணித்தனர். புதுமை பல நிகழ்ந்ததாகக் கருதப்படும் மரத்திற்செதுக்கப்பட்ட சுரூபத்தைக் கோவிலில் எழுந்தேற்றஞ் செய்தனர். இப்புதுமை மாதாகோவிலே யாழ்ப்பாணத்திற் கட்டப்பட்ட முதற் கத்தோலிக்க ஆலயமாகும்.

இதையொட்டிய வரலாறு இன்றும் கோட்டைக்குள்ளிருக்கும் கோவில் மணியில் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இப்புதுமை மாதாவைத் திருமறை மக்கள் கோட்டைமாதா என்றும், பட்டினத்துமாதா என்றும், யாழ்ப்பாணத்துமாதா என்றும் வெவ்வேறு பெயரிட்டுத் தொழுதுவந்தனர். யாழ்ப்பாணத்தில் பெருமக்கள் வாழ்ந்துவந்த பகுதி முன்பு சீதாரி (பறங்கித்தெரு)என அழைக்கப்பட்டு வந்தது. இப்பகுதியையடுத்து அமைந்திருந்த இக்கோவில் சீதாரிமாதா கோவில் என்றும் அறியப்பட்டுவந்தது.

யாழ்ப்பாண நாட்டிலுள்ள கத்தோலிக்க மக்களனைவரினதும் பொது அரச ஆலயமாக விளங்கிவந்தது இப்போலயமே. இதில் சமய ஆராதனைகள் பகிரங்கமாகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வந்தன.

கத்தோலிக்கரான போர்த்துக்கேயருடன் பிறமதக்கொள்கையாளரான ஒல்லாந்தர் சண்டையிட்டு, வெற்றியுற்று, 1658-ல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினர். போர்த்துக்கேயர் யாழ்ப்பாணக் கோட்டையைவிட்டுச் செல்லும்போது, புதுமைமாதா சுரூபத்தையும் கூடஎடுத்துச் சென்றனர்.

இப்புனித புதுமைமாதா சுரூபம் தற்போது இந்திய கோவைநகரிலுள்ள வியாகுலமாதா ஆலயத்தில் பூச்சியமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. புனிதசவேரியாரின் திருஉடற்தரிசனைக்குச் செல்பவர்கள் இப்புனித சுரூபத்தையும்கண்டு வணங்கிச் செல்வர்.

ஒல்லாந்தர், கோட்டைக்குள்ளிருந்த புதுமைமாதா கோவிலை அழித்து, உருமாற்றித் தமது சமய வழிபாட்டுத் தலமாக்கினர்.

கரைநகரைச்சேர்ந்த (குருநகர்)கத்தோலிக்கமக்கள், கோட்டைப் புதுமை மாதாகோவிலின் ஞாபகமாக, அயலில் புதிய ஓர் ஆலயத்தைக் கட்டி, ஒரு புதிய புதுமைமாதா சுரூபத்தைநிறுவி வழிபாடு நடத்திவந்தனர்.

இப்புதிய ஆலயமே தற்போது யாழ்ப்பாணப் புதுமைமாதா கோவில் என அறியப்படுகிறது. இப்புதியகோவில் 180ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது.

ஆசிநாதன்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திரு இருதய இரக்கத்தாலும், சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். செபஸ்தியார், அர்ச். அந்தோனியார், அர்ச். யூதாததேயு, அர்ச். இன்னாசியார் இவர்களது இரக்கத்தாலும் எனது கணவனுக்கு வந்த வருத்தம் குணமாகி, நானும் சுகமாகப் பிரசவித்தேன். இவர்களின் நாமம் புகழப்படுவதாக. பிரசுர தாமதத்திற்காக மன்னிப்புக் கேட்கிறேன்.

ஓர் அடியாள்

சாம்பல்தீவு. 24/68

## 40வருட சேவையின் பின்பு ஓய்வு பெற்றார்

"மனித சமுதாயத்துக்குப் பணிசெய்வதற்கு, அரசியலில் குதித்து நாம் பாராளுமன்ற அங்கத்தவராய் வரவேண்டியதில்லை. ஆசிரிய சேவையிலிருந்தே நாம் அரிய பணிகளைச் செய்யலாம். நாட்டுக்கும் இறைவனுக்குமேற்ற நல்லுள்ளங்களை அமைக்கும் பணி, ஆசிரியர்கள் கைகளில்தான் உள்ளது. சர்வகலாசாலைப் பேராசிரியர்கள் சிலர், விஷவித்துக்களைப் பரப்பி இளைஞர்களைத் திசை திருப்பி விடுகிறார்கள் என நாம் அறிகிறோம். ஆனால் சாதாரண கல்வி நிலையங்களில் நாம், உண்மை, நேர்மை, தெய்வபக்தி என்ற மூன்று முக்கியமான விதைகளையாவது ஊன்றிப் பிள்ளைகளைக் கடந்த 40வருடங்களாகக் கண்காணித்து வந்ததை எண்ணும்போது நாம் பெருமைப்படாமல் இருக்கமுடியாது." இவ்வாறு 40வருட ஆசிரிய சேவையின் பின்னர் ஓய்வுபெறும் ஆசிரியர் ச. சின்னப்புநாயகம் அவர்கள், சாவகச்சேரியில், பெற்றார், ஆசிரியர் பழைய மாணவர்களால் தமக்களிக்கப் பட்ட ஓய்வு உபசார விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்கள்.

சாவகச்சேரி கத்தோலிக்க கலாசாலை மண்டபத்தில் கடந்த வெள்ளிவாரம் மாலைநேரம் நடைபெற்ற இவ்விழாவுக்கு முன்னாள் பட்டினசபைத் தலைவர் திரு. ச. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார்கள். பண்டிதர் செ. செல்வரத்தினம் அவர்கள் தான் உடனாசிரியராயிருந்து பெற்ற அனுபவங்களைக் குறிப்பிட்டு ஆசிரியர் சின்னப்புநாயகம் அவர்களில் காணப்பட்ட அபூர்வ சாமர்த்தியங்களைப்பற்றிப் பேசினார். ஆசிரியர் அ. சுவாம்பிள்ளையவர்கள் நெடுந்தீவில் முதன்முதல் எஸ். எஸ். சி வகுப்பு 33ஆண்டுகளுக்குமுன் வைக்கப்பட்டதையும் அதில் மாணவர் முதலில் சித்திபெற ஓய்வுபெறும் ஆசிரியர் உழைத்த சிறப்பையும் விபரித்தார்கள். தொடர்ந்து வைத்தியர் சா. அந்தோனிப்பிள்ளை, நகரசபை உறுப்பினர் மயில்வாகனர் என் போர் ஆசிரியாவிடைநாயகரைப் போற்றிப் புகழ்ந்தனர். செல்வன் கிதபொன்கலன் வாழ்த்துமடல் வாசித்தளிக்க மாணவர்களால் குருதெட்சணைகளும் அளிக்கப் பட்டன.

ஈற்றில் பெற்றோரும் பழையமாணவர்களும் சமுகமாயிருக்க அங்குதானே தோத்திரப் பலிபூசை ஒப்புக்கொடுக்கப் பட்டது. ஆசிரியர் சின்னப்புநாயகம் அவர்கள் சிறந்த ஆசிரியராகவும், எழுத்தாளராகவும், நூலாசிரியராகவும், சமூகத் தொண்டனாகவும் கடந்தகாலத்தில் பணிபுரிந்தமை இங்கு நினைவுகூரத் தக்கதாகும். ஆசிரியர் அவர்களுக்கு முதல்நாள் பாடசாலை சார்பாக உபசார விழா நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.

கிருபர்.

## கி. பி. 2000-த்தில் தேவாலயங்கள் எப்படியாகலாம்?

"கிறிஸ்தவ ஒற்றுமை இயக்கம் முன்னேறிவரும் வேகத்தில் கி. பி. 2000-த்தில் கிறிஸ்தவ கோவில்கள் எவ்வகைப்பட்டனவாய் இருக்கலாமென யோசிக்க வேண்டி இருக்கின்றது. இன்று சில சில இடங்களில் ஒரு சபையினரின் தேவாலயத்தில் பிற கிறிஸ்தவசபையினரும் ஆராதனைகள் நடத்துகின்றனர். லண்டன் மாநகரின் ஆகாயவிமான தளத்தில் கட்டப்பட்டுவரும் தேவாலயம் ஒரு பொதுத்தேவாலயம். பல கிறிஸ்தவ சபையினரும் இதை உபயோகித்துக் கொள்வர். ஆகவே இன்னும் சில வருடங்களில் புதிய நகரங்கள் தோன்றும்போது கிறிஸ்தவசபைகள் பிறிதுபிறிதாக ஆலயங்கள் கட்டி எழுப்பாது பொதுவழிபாட்டு நிலையமாக ஒன்றை வைத்துக்கொள்வார்களென நாம் நம்புவதற்கு இடமுண்டு" என ஆங்கிலநாட்டுக் கத்தோலிக்க பத்திரிகை "யூனிவேர்ஸ்" நிருபர் ஒருவர் கூறுகின்றார்.

✝

### மனுவேல் பிரான்சீஸ்பீரிஸ் அவர்கள் அமரத்துவமடைந்த

## 1-ம் வருட மரண ஞாபகம்

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 16-9-1896 | 16-2-1967 |

இரக்கமுள்ள யேசுவே மரித்த மனுவேல் பிரான்சீஸ் பீரிசுடைய ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும் சுவாமி; முடிவில்லாத ஒளி இவருக்குப் பிரகாசிக்கக்கடவது. சமாதானத்தில் இளைப்பாறுவாராக—ஆமென்.

மண்ணைவிட்டு மறைந்தாலும் எம் மனக் கண்ணைவிட்டு என்றுமே அகலாத எனது அன்பிற்குரியவரும் எங்கள் அருமைத் தந்தையாருமான திரு. மனுவேல் பிரான்சீஸ் பீரிஸ் அவர்கள் இறைவனடி சேர்ந்து முதலாம் வருடம் இம்மாதம் 16-ஆம் நாள் வெள்ளிக்கிழமை (16-2-68) பூர்த்தியாகிறது. எனவே இதனைக் கண்ணுறும் சகலரும் இவருடைய ஆன்ம ஈடேற்றத்திற்காக வேண்டிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்

மனைவி: எமரேஞ்சியா பறுநாந்து

பிள்ளைகள்:

லாசர் மேரி அகினல் பீரிஸ், அன்ரனி மைக்கல் பீரிஸ், அலக்சாண்டர் பீரிஸ், தியடோர் பீரிஸ், சங். பிறதர் கமிலஸ் பீரிஸ், O. M. I., கனீபியஸ் பீரிஸ், வெஞ்செஸ்லாஸ் பீரிஸ்.

248, பீச்ரோட்,
வங்காலை. 25/68

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதா, அர்ச். அந்தோனியார் இவர்கள் மூலமாய், ஆண்டவரிடம் யான் கேட்ட நன்மைகள் பூர்த்தியாயின. நன்றியறிதலாக இதனைப் பிரசுரிக்கிறேன்.

கரம்பன், 23/68 T. M. J.

## வையகத்தின்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

து அலுவல்களும் நித்தியத்திற்கும் நீடிக்கும் பலனைப் பெறுகின்றன, தன்னுயிர் ஈந்து சேயைக் காக்கும் தாயின் தியாகம் எப்படி மறைய முடியும்? தன்னலமற்ற நண்பரின் நட்பு எங்ஙனம் அழிய முடியும்? மனிதனின் உழைப்பு ஒன்றுமில்லாமையாகிவிட முடியுமா? இறைவன் முழுமை பெறாத ஓருலகை நமக்களித்து உழைப்பினால் முழுமையாக்க அளித்துள்ளார்.

### வத்திக்கான் உணர்த்துவது

"நவீன உலகில் திருச்சபை" என்ற 2-ம் வத்திக்கான் அளித்துள்ள கொள்கைத் திரட்டில் 34–39 எண்கள் மனிதனின் அலுவல்கள், அவற்றின் உயர்வு, கதி முதலியவற்றை அழகாக விளக்குகின்றன. இவ்வுலகுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பை விளக்கிய பின் "இறைவன் ஒரு புதிய வாழும் இடத்தை, நீதி நிறையும் ஒரு புதிய பூமியைத் தயார் செய்துகொண்டிருக்கிறார். அவ்விடத்தின் மாண்பு மனிதனின் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் நீதியின் ஏக்கத்தைத் தணிப்பதுடன், நிறைந்து பொங்கி வழியும்...கிறிஸ்து இறுதியாகப் பிதாவுக்கு முழுமை அடைந்த அரசை அளிக்கும்பொழுது அது 'உண்மை, உயிர், அருள், தூய்மை, நீதி, அன்பு, அமைதிநிறை' அரசாக இருக்கும்" (எண். 39) என்று விளக்குகின்றது.

நம் வாழ்வில் நாம் எவை எவையெல்லாம் நித்தியத்திற்கும் நீடிக்க விரும்புகின்றோமோ அவை அனைத்துடனும் நாம் உயிர்ப்போம். அதேபோன்று நமது வாழ்வும் நித்தியத்திற்கும் நீடிக்க வேண்டுமென்று உண்மையாக விரும்பும்பொழுது மட்டும்தான் அது பலனுள்ளவாழ்வாக மலரும்.

—கத்தோலிக்க சேவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மடுப்பதியில் கிராமக்கோடு

தற்பொழுது பெரியபண்டிவிரிச்சான், மடு, பாலம்பிட்டி, பெரியமடு எனும் கிராமங்களில்வசிக்கும் மக்களுக்கான கிராமக்கோடு இரணை இலுப்பைக்குளத்திலே இருந்துவருகிறது. இந்தக் கிராமங்களிலிருந்து அதிகமதூரத்தில் கிராமக்கோடு இருந்துவருவதால் அதற்குச் சமுகமளிப்பதில் கிராமமக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். ஆகவே ஒரு கிராமக்கோட்டுக்கு மருதமடுத் திருப்பதியே மத்தியதானமாய் இருப்பதால் அதற்கென அங்கு ஒருதகுதியான கட்டடத்தைப் பெற்றுப் பாவிப்பதற்கு அத்திருப்பதிப் பரிபாலனரின் சம்மதத்தை நீதிமந்திரி காரியாலயம் பெற வேண்டுமென்று மன்னார்மாவட்ட கூட்டிணைப்புக் கமிற்றியில மாவட்ட காணி அதிகாரியான திரு. ரி. டபிள்யு. ஏ. இராசரத்தினம் கொண்டுவந்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

## நெஸ்பிறே விலையேற்றம்

ஒருருத்தல் நெஸ்பிறே பால்மாவுக்கு இனிமேல் 65சதம்கூடுதலாகக் கொடுக்கவேண்டிவரும். புதிதாக இறக்குமதியாகும் பதினெருவகைப் பாலுணவுகளுக்குப் புதியவிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. சிலவற்றின் புதியவிலைகள் வருமாறு: நெஸ்பிறே 3-55. விற்றுஸ்பிறே 3 30. லோமட் 3-60. லக்ரோஜன் (12 அவுண்ஸ்) 2-35. கவ் அன் கேற் (இரண்டரை ருத்தல்) 7-50.

## ஜி. சி. ஈ. பரீட்சை

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சையில் ஐந்துபாடங்களிலும், அதற்கு மேற்பட்ட பாடங்களிலும் சித்தியடைந்த மாணவர்களுக்குத்தான் இனிமேல பரீட்சைப்பகுதி தராதரப்பத்திரங்கள் அனுப்பிவைக்கும். ஐந்துபாடங்களுக்குக் குறைவாகச் சித்தியடைந்தவர்கள் மனுப்பண்ணிக் கொண்டால் மட்டும் அவைகள் அனுப்பப்படும்.

## புதிய தானியக் களஞ்சியம்

காங்கேசன்துறையிலே சுமார் 2லட்சம் அரிசிமூடைகள் கொள்ளக்கூடிய தானியக் களஞ்சியமொன்று 1கோடி ரூபாசெலவில் அமைக்கப்படவிருக்கிறது. இது நாவற்குழித் தானியக் களஞ்சியசாலையிலும் அதிகமான அரிசி மூடைகளைக் கொள்ளக் கூடியதாயிருக்கும். காங்கேசன்துறையிலே முன்னர் வயோதிபர்சாலைகட்டுவதற்கெனப் பட்டினசபை ஒதுக்கியிருந்த இடத்திலே இது அமைக்கப்பட விருக்கிறது.

## பஸ்களும் விபத்துகளும்

வீதிகளில் நடைபெறும் விபத்துமரணங்களை உண்டுபண்ணுவதில் போக்குவரத்துச்சபை பஸ்கள்தான முதலிடம் வகிக்கின்றன. சென்றவருடம் நாடு முழுவதிலும்ஏற்பட்ட 478வீதிவிபத்து மரணங்களில் ஏறக்குறைய அரைவாசியும் அவற்றுலேயே உண்டாயின. பஸ்களின் சாரதிகள் அதிகம் கவனமாயிருந்து ஒடுங்கிய வீதிகளில் சாவதானமாகப் பஸ்களைச் செலுத்துவார்களானல் அதிகப்பற்றுன விபத்துகள் நேர்ந்திருக்க மாட்டாவென்று பொலிஸ் வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

## ஏக்கருக்கு 60புசல்

இலங்கையின் 14மாவட்டங்களிலே சென்றவருடம் நெல்விளைவு அதிகரித்துள்ளது. திருகோணமலையில் ஏக்கருக்கு 60புசல்நெல்வீதம் விளைவுகண்டிருக்கிறது. அடுத்தபடியாக மன்னர் இரண்டாவது இடத்தையும், நுவரெலி, கண்டி, அம்பாந்தோட்டை மூன்றுவது இடத்தையும் வகித்துள்ளன. பொதுவிலே இலங்கையின் நெல்விளைவு சென்றவருடத்தில் எதிர்பார்த்ததிலும 20லட்சம்புசலால் அதிகரித்திருக்கிறது. இலங்கையில் நெல்விளைவு அதிகரித்திருப்பதாலே இவ்வருடம் 3,25,000 தொன் அரிசியே இறக்குமதி செய்யப்படுமென எதிர்பார்க்கப் படுகிறது. 1966ஆம் ஆண்டில் 5,50 000 தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது.

# உள்நாட்டுச் செய்திகள்

## நவீன உபகரணங்கள்

வடமாகாணத்திலே கடற்தொழில் அபிவிருத்தி யடையுமாறு முத்து, சங்கு, கடலட்டை குளிப்பவர்கள் நவீன முறைகளைக் கையாளும்படியாக நவீன உபகரணங்களை இறக்குமதி செய்து அவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் செய்துவருகின்றார். இந்தநவீன உபகரணங்கள் கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன. வெளிநாட்டுச் செலாவணியைச் சேகரிக்க முத்து, சங்கு, கடலட்டை ஆகியவற்றின் அதிகமான ஏற்றுமதி பேருதவியாய் இருக்கும்

## கொழும்பின் சனப்பெருக்கம்

1938-ம் ஆண்டிலே 3,15,220பேராயிருந்த கொழும்புநகரின் சனத்தொகை 1965ஆம் ஆண்டிலே 5,41 451பேராய் உயர்ந்து சென்ற 1967ஆம்ஆண்டின் மார்கழியில் 6 00,000பேராக அதிகரித்திருக்கிறது. இவர்களைத்தவிர5,50,000 பேர்வரை தொழில்நிமித்தமாகத் தினமும் அந்நகர்சென்று வேலைசெய்துவிட்டுத் திரும்புகின்றனர். அதனால் கொழும்புநகருக்கு அதிகமானதண்ணீர் வழங்குவதற்கான வழிவகைகள் செய்யப்படாவிடில் அந்நகர்வாசிகள் அடுத்த மூன்று அல்லது நான்குவருடங்களில் பெருந் தண்ணீர்ப்பஞ்சத்தை எதிர்நோக்கவேண்டி யிருப்பார்களென இப்போதேஎச்சரிக்கைசெய்யப்படுகின்றது. தற்பொழுது அந்நகருக்குக் கலத்துவாவா, லபுகாம வாவிகளிலிருந்தே பாவனைக்குவேண்டிய தண்ணீர்கிடைக்கின்றது.

## அரிசிவிலை குறையுமா?

யாழ்ப்பாணத்தில் அரிசியின்விலை குறைவதற்கான அறிகுறி காணப்படுகிறது. புன்னாலைக்கட்டுவனிலுள்ள ஓர் அரிசிமில்லின் சொந்தக்காரர் ஒரு மூடைஅரிசி 90ரூபாவீதம் கொடுக்கத் தயாராயிருப்பதாக வடபகுதிப் பொலிஸ் சுப்பிறின்ரனிடம் தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது. இந்தவீதப்படி ஒருபடிஅரிசியை 1ரூபா 20சதத்துக்கு விற்றுலும் சில்லறை வியாபாரி ஒருவர் 8சதம் இலாபமடையமுடியுமாம்.

## வாலிபர் குடியேற்றம்

கிளிநொச்சி, விஸ்வமடுக் குடியேற்ற திட்டத்திலே உபஉணவுப்பொருள் செய்கையை விருத்திசெய்யுமுகமாக மேலும் 50இளைஞர்கள் இம்மாதஇறுதியில் அங்கு குடியேற்றப்பட விருக்கிறார்கள். இத்திட்டத்தில் ஏற்கனவே 100இளைஞர்கள் குடியேற்றப் பட்டுள்ளார்கள்.

## பத்துலட்சம் முட்டைகள்

அரசாங்க விற்பனவுப்பகுதி சென்ற 1967ஆம ஆண்டிலே முந்திய வருடத்தைக்காட்டிலும் கூடுதலாகப் பத்துலட்சம் முட்டைகள்வாங்கி விற்பனைசெய்திருக்கிறது. இந்த முட்டைகள் தனிப்பட்டவர்களிடமிருந்தும், கோழிவளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் வாங்கப்பட்டன.

## மது,மாமிச இறக்குமதி

பிறநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் மதுபானவகை, மாமிசவகையை இறக்குமதிசெய்வதை இவ்வருடத்திலிருந்து தடைபண்ண அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது. முதலிலே இத்தத்தடை தற்காலிகமுறையிலேயே நடைமுறைக்குவரும். நாணயமதிப்புக் குறைக்கப் பட்டதிலிருந்து இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணியின் நிலைமை மிகமோசமடைந்துள்ள காரணத்தினுலே [illegible] மதி தடை [illegible]

## பாடசாலைகளும் விஞ்ஞானமும்

ஒருதொகையான பாடசாலைகளுக்கு பொதுவாகப் பயன்படக் கூடியனவாய் அவற்றிற்கு நடுவிடமாய்ப் பூரணமாக உபகரணங்கள் அமைந்துள்ள இருபது விஞ்ஞான ஆய்வுகூடங்களை நிறுவும் திட்டமொன்றைக் கல்விப்பகுதி தயாரித்திருக்கிறது. தற்பொழுது அரசாங்க பாடசாலைகளில் 150விஞ்ஞான ஆய்வு கூடங்களே இருந்துவருகின்றன. வெளியூர்களிலுள்ள பாடசாலைகளுக்கென மத்திய விஞ்ஞான ஆய்வுக்கூடம் நிறுவப்படவேண்டுமென்ற கருத்தைவெளியிட்டவர் இலங்கைச் சர்வகலாசாலையின் முன்னாள் உபவேந்தரான சேர் நிக்கலஸ் அற்றிக்கலை அவர்களே.

## மிகப்பெரிய வீதிவிபத்து

இலங்கை வீதிப்போக்குவரத்துச் சரித்திரத்திலேயே நடைபெற்ற மிகப்பெரிய பஸ்விபத்தொன்று இலங்கைப் போக்குவரத்துச்சபை வர்ணிக்கும் பதுளைக் கடுகதிப் பஸ்விபத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்குப் போக்குவரத்துச்சபைநஷ்டஈடுவழங்கவிருக்கிறது சகல பிரேதங்களும் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டபின் நஷ்டஈடுமனுக்களைச் சபைகவனிக்கும். ஒரு பிரயாணிக்கு 5 000 ரூபாவீதம் நஷ்டஈடு வழங்கப்படும். இத்தொகைக்கு மேற்பட்டமனுக்களை இன்சூறன்ஸ் கார்ப்பறேசன் கவனிக்கும். 1958ஆம் ஆண்டு தும்மோதரைஎனும் கிராமத்து றெயில்வேக் கடவையில் நிகழ்ந்த விபத்தில் பதுளைபஸ்விபத்தில் இறந்தவர்களில் பாதிப்பேரே இறந்தார்கள்.

## அமெரிக்க கோதுமை மா

அமெரிக்க ஐக்கியதேசம் "அமைதிக்கு உணவு" என்ற தனது திட்டத்தின்கீழ் இலங்கைக்கு 33,000 தொன் கோதுமைமா விற்பனவு செய்திருக்கிறது. 1கோடியே 35லட்சத்து 28 ஆயிரம்ரூபா பெறுமதியுள்ள இந்தமாமுழுவதும் அடுத்த வைகாசிமாதம் 15ஆம் திகதிக்குமுன் இலங்கைவந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது

## லொறி குடைசாய்ந்தது

அநுராதபுரத்திலிருந்து மொறவீவா விவசாயப்படை முகாமுக்கு 45மூடை அரிசிஏற்றிச் சென்றுகொண்டிருந்த விவசாயப்படை லொறிஒன்று திருகோணமலைவீதியிலே 59ஆம்மைல்கட்டையில் தந்திக்கம்பம் ஒன்றுடன் மோதிக் குடைசாய்ந்தது. இந்தவிபத்தில் 19பேர் படுகாயமடைந்தனர். இருவரின்நிலை அபாயகரமாயிருக்கின்றது.

## கைத்தொழில் பேட்டை

வடஇலங்கை முன்னேற்ற சங்கமாகிய தனியார்ஸ்தாபனம் தொண்டமானாற்றிலே காங்கேசன்துறை வீதியில் வடமாகாணத்திலே முதன்முதலாகக் கைத்தொழில பேட்டைஒன்றைநிறுவவிருக்கிறது. இதிலே நெசவுதொழில், கடைச்சல்தொழில், கப்பல்கட்டும் தொழில், யந்திரமூலம் நெல்குத்துதல் முதலிய தொழில்களை நடத்தத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

வானொலியில்

**கத்தோலிக்க நிகழ்ச்சி**

நாள்: 18-2-68 ஞாயிறு
காலம்: பி. ப. 7 — 7-30 வரை

நீ. மரியசேவியரின்


**"சோதனைக்களம்"**

என்னும் சுவிசேஷ சரித்திர
**இசை–உரை–நாடகம்**

பங்குபற்றுபவர்கள்:
எஸ். எம். செல்வராஜ், வி. ஜெகந்நாதன், ம. சோதிநாதன், எஸ். தேவதாஸ், எஸ். லீயோ, எம். ஜேம்ஸ், ஏ. வி. ஆனந்தன்

## ஐந்துலட்சம் முட்டைகள்

அரசாங்க விற்பனைப்பகுதி சிலமாதங்களின்முன் கொள்வனவுசெய்து விலைப்படாமல கையிருப்பில் தேங்கியிருந்த சுமார் ஐந்துலட்சம் கோழிமுட்டைகள் பாவனைக்குதவாமல் அவிந்து கூழ்முட்டைகள் ஆகிவிட்டமையால் கொழும்பு நகருக்குவெளியே கொண்டுசென்று பெரிய கிடங்குஒன்றில் புதைக்கப்பட்டுள்ளன. இம்முட்டைகளின் பெறுமதி 90,000 ரூபாவாகும்.

மின்சாரத்தில் இயங்கும்
**சென்றிக்**
நீர் இறைக்கும் இயந்திரங்களையும்
மண்ணெண்ணெயினுல் இயங்கும்
**சென்றிக்**
யூனியர்—சீனியர்
பாரம் குறைந்த
நீர் இறைக்கும்
இயந்திரங்களையும்
எமது பலதரப்பட்ட
நீர் இறைக்கும்
இயந்திரங்களுடன்
அறிமுகப்படுத்துகிறோம்

**ஒட்டோஸ் லிமிட்டெட்**
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம்ஆல மாசிமீ 17-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org